TAMIL NADU LEGISLATURE
16 சன 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1977 ஆகஸ்ட் 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வடாற்காடு மாவட்டத்தில் நீர்த்தேக்கம்.

*32 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் நடப்பாண்டில் எத்தனை நீர்த்தேக்கங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) போளூர் வட்டம் செண்பகத் தோப்பு கிராமம் அருகே கமண்டலாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இத்திட்டம் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

*33 வினா—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், படவேடு பகுதி செண்பகத்தோப்பு அணைக்கட்டு திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டதா?

[1977 ஆகஸ்ட் 8

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(இ) விரைவில் அறிவிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் தொகுதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த, வெள்ளையன் காலத்தில் இருந்தே பரிசீலிக்கப்பட்ட மோர்தனா என்ற திட்டம் இருக்கிறது. 1954 பை-எலெக்ஷன் போதே திரு. காமராஜ் அவர்கள் அதை நிறைவேற்றித் தருவதாகக் கூறினார்கள். அதற்குப் பிறகு முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் 30-3-1975-ல் 355 இலட்சம் ஒதுக்கி, இதைத் துவக்கி நடத்தினார்கள். அதற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஆதிக்கத்தில் அத்திட்டம் தூக்கியெறியப்பட்டுவிட்டது. அந்த முக்கியமான திட்டத்தைக் கட்டுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : 1954-ல் இருந்தே, அது இதுவரை நிறைவேற்றப்படாமல் இருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்திட்டம் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். நடப்பாண்டில் ஒதுக்கப்படுகிற தொகை எவ்வளவு ? மொத்தம் அத்திட்டத்திற்கு ஆகும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மொத்தம் செலவு 3 கோடியே 55 இலட்சம் ரூபாயாகும். இந்தத் திட்டம் இந்த ஆண்டு எடுக்கப்பட்டு, எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒவ்வொரு திட்டமும் எடுத்தவுடனே நடத்திவிடுவது இல்லை. ஐம்பது வருஷம், 100 வருஷங்கள் கூட பரிசீலிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த மோர்தனா திட்டம் பலகாலமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதனால் அதன்

1977 ஆகஸ்ட் 8]

முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. குடியாத்தம் தொகுதி பூராவும் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த அடிப்படையிலே இங்கே அணை கட்டித் தேக்கி வைத்தால் அப்பகுதிகளில் உள்ள கிணறுகள் பூராவும் நீர் ஊற்று இருக்கும். ஆதலால் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: காலதாமதத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் காரணம் சொன்னதற்கு நன்றி. ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. ஆண்டியப்பனூர் அணைக்கட்டுத் திட்டமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன? எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கேள்வி ரிசர்வ்வாயரைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆக்கப் பொறுத்ததை ஆறப் பொறுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். 1967-68-ல் போடப்பட்ட திட்டம் 105 இலட்சம், 1976-ல் அது மூன்று கோடி 55 இலட்சம் ஆயிற்று. நாளுக்கு நாள் சிமிண்டு விலையும், மற்ற பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போவதால் பத்து கோடி அளவிற்கு வரும் வரை பொறுத்திருக்க வேண்டுமா? அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகக் கட்டித்தர முன்வருவார்களா, அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விலைவாசி உயர உயர ரூபாயின் மதிப்பும் குறைகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆட்சிக்கத்தில் மேற்படி திட்டம் நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு ஆதாரம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

கோழிப்போர்விளைக்குப் பாசன வசதி.

* 34 வினா—திரு. எ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவிதாங்கோடு சானலின் கிளை கால்வாயான கோடியூர் கால்வாயில் இருந்து கோழிப்போர் விளைக்கு அருகாமையில் ஒரு புதிய வாய்க்கால் வெட்டி சுமார் நாற்பது எக்கரா நிலத்திற்கு பாசன வசதி செய்து கொடுப் பதற்காக நில ஆர்ஜிதம் செய்யவும் கால்வாய் வெட்டவும் திட்டமிட்டு மதிப்பீடு தயார் செய்து, அரசு ஒப்புதலுக்காக பல வருடங்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டதே அதற்கு அரசு நல்கிவிட்டதா ? இல்லையெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிதி பற்றாக் குறையின் காரணமாக திருவிதாங்கோடு கால்வாயின் 29 ஆம் எண் மதகின்கீழ் உள்ள நிலங்களுக்கு பாசனத்திற்கான வாய்க்கால்களை அமைக்கும் திட்டம் இதுவரை எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

* 28. வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. என். இராமச்சந்திரன் :

திரு. துரை முருகன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—